செ.வெ.எண்:66/மார்ச் நாள்: 30.03.2019

**இராமநாதபுரம் மாவட்டம்**

**தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ரூ.10,000-க்கும் அதிகமான தேர்தல் செலவினங்களை வங்கிக் கணக்கின் வாயிலாக காசோலை/வங்கி வரைவோலை மூலாக மட்டுமே மேற்கொள்ள வேண்டும்**

**மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் அறிவுறுத்தல்.**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (30.03.2019) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதிக்கான தேர்தல் பொது பார்வையாளர் திரு.நரேந்திர சிங் பர்மார்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், வேட்பாளர்கள் தேர்தல் செலவினங்களை மேற்கொள்ளும் போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்கள்/வேட்பாளர்களின் தலைமை முகவர்கள் (Chief Agent) உடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஓம் பிரகாஷ் மீனா,இ.கா.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி அவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

இக்கூட்டத்தில், மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள் தொடர்பான இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டு அனைத்து வேட்பாளர்களுக்கும் இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிமுறைகளின்படி சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இறுதி வேட்பாளர் பட்டியலின்படி இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதியில் மொத்தம் 23 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். வேட்பாளர்கள் அனைவரும் தாங்கள் மேற்கொள்ளும் தேர்தல் செலவினங்கள் தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையம் வரையறுத்துள்ள நடைமுறைகளை கடைபிடிப்பது அவசியமாகும்.

வேட்பாளர்கள் அனைவரும் தேர்தல் செலவினங்களுக்கு பயன்படுத்துவதற்காக பிரத்யேக வங்கி கணக்கு துவங்கி, அதன் மூலமாக மட்டுமே அனைத்து செலவினங்களையும் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக ரூ.10,000-க்கும் அதிகமான தேர்தல் செலவினங்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட வங்கிக் கணக்கின் வாயிலாக காசோலை/வங்கி வரைவோலை உள்ளிட்ட வங்கி பரிமாற்றம் மூலமாக மட்டுமே மேற்கொள்ள வேண்டும். ரொக்கமாக பணப்பரிவர்த்தனை மேற்கொள்ளக் கூடாது. தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் நாள் வரையில் வருவாய் விவரங்கள், செலவின விவரங்களை முறையே பராமரித்து தேர்தல் செலவின பார்வையாளர்களிடம் சமர்ப்பித்திட வேண்டும்.

மேலும், இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி அரசியல் கட்சிகளின் பொதுவான தேர்தல் பரப்புரை செலவினங்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சியின் கணக்கில் சேர்க்கப்படும். அதே வேளையில் அத்தகைய பரப்புரைகளின் வேட்பாளரின் பெயர், புகைப்படங்கள் அல்லது மேடையை பகிர்ந்து கொண்டாலோ அத்தகைய தேர்தல் செலவினங்கள் அனைத்தும் வேட்பாளரின் தேர்தல் செலவினக் கணக்கில் சேர்க்கப்படும். அதேபோல, அரசியல் கட்சி சார்ந்த நட்சத்திர பரப்புரையாளர்களின் பெயர் பட்டியலை தலைமை தேர்தல் அதிகாரிக்கும், இந்திய தேர்தல் ஆணையத்திற்கும் சமர்ப்பிப்பதை உறுதி செய்திட வேண்டும். இல்லாவிடில் நட்சத்திர பரப்புரையாளர்களின் பிரயாணச் செலவுகள் முழுவதும் வேட்பாளர்களின் செலவுக் கணக்கில் சேர்க்கப்படும்.

மேலும், வேட்பாளர்கள் பேரணி, ஊர்வலம், பொதுக்கூட்டம் ஆகியவற்றை நடத்திட சுவிதா செயலி மூலம் உரிய முன்னனுமதி பெற வேண்டும். அதைப்போல, சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்கள் போன்றவற்றையும் முறையே முன்னனுமதி பெற்ற பின்னரே அச்சிட வேண்டும். அதேபோல, உள்ளூர் கேபிள் தொலைக்காட்சிகள் மற்றும் மாவட்ட அளவில் நாளிதழ்களில் விளம்பரம் செய்வதற்கு ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் முன்னனுமதி பெற்ற பின்னரே வழங்கிட வேண்டும். இவ்வாறு முன்னனுமதி பெறுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளைச் சார்ந்த பிரதிநிதிகள் குறைந்தபட்சம் 3 நாட்களுக்கு முன்னதாகவும், பிற வேட்பாளர்கள் குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்னதாகவும் விண்ணப்பித்திட வேண்டும்.

வாக்காளர்களுக்கு கையூட்டு அளிப்பது, வேட்பாளரின் அனுமதி இன்றி அவரது வெற்றி வாய்ப்பு நிலையை கைப்பற்றுவது அல்லது மேம்படுத்துவது போன்ற நடவடிக்கைகள் இந்திய தண்டனைச் சட்டம் 171A முதல் 171I வரையிலான பிரிவுகளின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்தல் செலவின இறுதி அறிக்கையினை முறையே தொகுத்து உரிய படிவங்களில் 30 நாட்களுக்குள் தேர்தல் செலவின பார்வையாளர்களிடம் சமர்ப்பித்திட வேண்டுமென மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், உதவி தேர்தல் அலுவலர்கள் (பரமக்குடி) திரு.எஸ்.ராமன், (முதுகுளத்தூர்) திருமதி.கயல்விழி உட்பட இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்கள்/வேட்பாளர்களின் தலைமை முகவர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**